**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.**

**அ.வ.எண். 32/2014**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 13** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி** **13.10.2025**

**பெயர்** **பழநி**

**த/பெ** **சாமிநாதன்**

**சாட்சி** **PW1**

**விசாரணை தொடங்கும் நேரம்– 11.30.a.m**

**குறுக்கு விசாரணை –**

1. என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு தெரியாமல் பிரதிவாதிகளே உயில் எழுதிக்கொண்டார்கள். 2013 ல் எழுதிக்கொண்டார்கள். சர்வே எண்.247/4, 40 செண்ட் நிலத்திற்கு உயில் எழுதிக்கொண்டார்கள். இந்த வழக்கை 20 செண்ட் நிலத்திற்கு தாக்கல் செய்துள்ளோம். முதலில் 40 செண்ட் கோவிந்தராஜ் என்பவருக்கு சொந்தம் என்றால் சரிதான். அதனை பாக்கியம்மாள் 1926 ல் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். பாக்கியம்மாளுக்கு வாரிசுகள் இல்லை. பாக்கியம்மாள் 40 செண்ட் நிலத்தை தெற்கு பக்கம் பொன்னாம்மாளுக்கும், வடக்கு பக்கம் வடிவம்பாளுக்கு கொடுத்தார். அந்த உயிலில் என்ன குறிப்பிட்டு இருந்தது என்றால் நான் படித்து பார்த்துள்ளேன். அதன்ப படி உயில் எழுதி வைத்த பாக்கியம்மாள் அவர் உயிருடன் இருக்கும் வரை அவர் அனுபவித்திருக்க வேண்டும் என்றால் சரிதான். அவர் இறப்பிற்கு பிறகு அந்த உயிலின் மூலம் பயன்பெறுவோர் அவர்களின் வாழ்நாள் முழுவதும் அனுபவிக்க வேண்டியது என்றால் சரிதான். அந்த உயிலில் பொன்னாம்மாளும், வடிவம்பாளும் அவர்களின் இறப்பிற்கு பிறகு அவர்கள் வாரிசுகள் அனுபவிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான்.

2. பொன்னாம்மாளின் மகன் தான் ராமலிங்கம் என்றால் சரிதான். அந்த ராமலிங்கத்தின் மனைவி தான் 1ம் பிரதிவாதியாக எமரோஸ் அம்மாள் என்றால் சரிதான். வடிவம்பாளின் வாரிசுதான் சாமிநாத முதலி என்றால் சரிதான். உயிலின் படி அவரவர்களுக்கு எழுதிய பங்கினை அவரவர்கள் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். வடிவம்பாளுக்கு உயிலின் படி வடக்கு பக்கம் 20 செண்ட் எழுதி வைக்கப்பட்டது என்றால் சரிதான். நாங்கள் இந்த வழக்கில் தொடுத்து இருப்பது பொன்னாம்மாளுக்கு எழுதபட்ட தெற்கு புறமாக உள்ள 20 செண்ட் என்றால் சரிதான். தெற்கு பக்கமாக பொன்னாமாளுக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தை எதன் அடிப்படையில் நாங்கள் உரிமை கோருகிறோம் என்றால் 1954 ல் பொன்னாம்மாளும் அவருடைய மகனான ராமலிங்கமும் சேர்ந்து தெற்கு புறமாக அவருக்கு ஒதுக்கப்பட்ட 20 செண்ட் நிலத்தையும் எங்களுக்கே கடிதம் மூலமாக கொடுத்துவிட்டனர், அதில் இருந்து நாங்கள் அனுபவித்து வருகிறோம்.

3. 1954 ல் இருந்து அனுபவித்து வருவதை காட்ட அன்று முதல் இன்று வரை ஏதேனும் வருவாய் ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. அந்த கடிதத்தை சட்டப்படி செல்லாது என்று இந்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த உயிலில் பொன்னாம்மாள் உயிருடன் இருக்கும் வரை நிலத்தை பொறுத்து எந்த பாரதீனம் செய்யக்கூடாது என இருந்தது என்றால் அது போன்று குறிப்பிடவில்லை. அந்த கடிதத்தின் அடிப்படையில் தான் நான் கோருகிறேனா அல்லது வேறு ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் அடங்கல், கிஸ்து, பட்டா போன்ற அரசாங்க ரசீதுகள் உள்ளது. அதன்பிறகு 1968 ல் வடிவம்பாள் அவரின் மகனாக சாமிநாதனுக்கு மற்றொரு உயில் எழுதி வைக்கிறார் என்றால் சரிதான். உயில் எழுதிவைத்த அசல் ஆவணம் எனது தாய், தந்தையர் உயிருடன் இருந்தபொழுதே தொலைந்துவிட்ட காரணத்தால் அதன் நகலினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நகல் 2017 ல் வாங்கப்பட்டது. அதன் நகல் எவ்வாறு எனக்கு கிடைக்கப்பெற்றது என்றால் தேடி எடுத்ததன் மூலம் கிடைக்கப்பெற்றது.

4. 2017-ல் நகல் கண்டுபிடிக்கப்பட்ட பட்சத்தில் நீதிமன்றத்தில் அதனை சமர்ப்பிக்க மனு எந்த வருடம் தாக்கல் செய்தேன் என்றால் ஞாபகம் இல்லை. 1968 ல் எழுதிய உயிலை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்துள்ளேன் அலமாதியில் உள்ள 'எ' செட்டியுல் சொத்தினை எனது தந்தையாகிய சாமிநாதனுக்கும், 'பி' செட்டியுல் சொத்தினை எனது

அத்தைக்கும் கொடுக்கப்பட்டது. மேற்கூறிய 1968 உயிலில் வடிவம்பாள் அவருக்கு 1929 ல் பாக்கியம்மாள் எழுதி வைத்த உயிலின் படி அவர் தற்போது உயில் எழுதி வைப்பதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். அதேபோல் 20.07.1929 ல் எனக்கும் எனது சின்ன தமக்கைக்கும் எழுதி வைத்த உயிலின் படி எனக்கு தெளிவாக கூறும்பட்சத்தில் வடிவம்பாளுக்கு 20 செண்ட் குறித்துமட்டுமே 1968 ல் உயில் எழுதப்பட்டது என்றால் சரிதான். 1954 ல் பொன்னம்மாள் மற்றும் அவரது மகனான ராமலிங்கமும் 40 செண்ட் நிலத்தையும் சாமிநாத முதலி அனுபவிக்க மேற்சொன்ன கிரைய லெட்டர் மூலமாக கொடுத்துவிட்டார்.

5. 1929 பாக்கியம்மாள் எழுதி வைத்த உயிலின் படி எழுதிவைத்தவர் ஆயுள்பரியந்தமும் அவரின் இறப்பிற்கு பிறகு எழுதி வாங்கி கொண்டவர்களாகிய பொன்னாம்மாள் மற்றும் வடிவம்பாளும் அவர்கள் அவர்கள் வாழ்நாள் வரை அனுபவித்து அதன்பிறகு அவர்களின் வாரிசுகளுக்கு பூரண உரிமை கொடுத்திருக்கும் பட்சத்தில் எந்த ஆவணமும் பொன்னம்மாளோ, வடிவாம்பாளோ எழுதி கொடுத்திருந்தால் அது சட்டப்படி செல்லத்தக்கது என்றால் எனக்கு தெரியாது. தெற்கு பக்கம் உள்ள 20 செண்ட் நிலத்திற்கு 1954 கிரைய லெட்டர் மூலமாக உரிமை கோருகிறோம். 20 செண்ட் நிலத்தில் என்ன பயிர் செய்கிறேன் என்றால் மூன்றுபோகம் பயிர் செய்வோம். மிளகாய், கேழ்வரகு, கம்பு மற்றும் எள்ளு போன்றவற்றை பயிர் செய்து வருகிறோம். இரண்டில் இருந்து மூன்று மூட்டை அளவிற்கு விளச்சல் வரும்.

6. நான் பயிர் செய்வதை பார்த்து கிராம நிர்வாக அலுவலர் அடங்கல் கணக்கு எழுதியுள்ளாரா என்றால் எழுதி உள்ளார். 1954 ல் எனக்கு சொத்து கிடைக்கப்பெற்றது என்று கூறும் பட்சத்தில் அந்த சமயத்தில் கொடுக்கப்பட்ட பட்டா என்னிடம் உள்ளதா என்றால் இல்லை தொலைத்துவிட்டேன். அதுபோல் புத்தக வடிவில் பட்டா எதுவும் என் பெயரில் வழங்கப்படவில்லை என்றும் நான் பொய்யுரைக்கிறேன் என்றால் சரியல்ல. அதுபோல் தொலைந்துவிட்டது எனக்கூறி வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து ஏதேனும் மனுவினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.8 ஆவணம் நிலவுடைமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பெறும்பாலான நபர்களுக்கு தவறுதலாக பட்டா வழங்கப்பட்டது என்றால் சரியல்ல, மேலும் ராமலிங்க முதலியாரின் பெயரில் பட்டா வழங்கக்பட்டது அதனை நாங்கள் வாங்கவில்லை ஆட்சேபனை செய்துவிட்டோம். 1954 ல் இருந்து தொடர்ச்சியாக அரசாங்கத்திற்கு கிஸ்து மற்றும் பிற வரிகள் கட்டியிருந்த

ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. பொன்னாம்மாளுக்கு தெற்கு பக்கம் ஒதுக்கப்பட்ட 20 செண்ட் நிலத்தை ராமலிங்கம் தான் அனுபவித்து வந்தார் என்றால் 1954–க்கு பிறகு நாங்கள் தான் அனுபவித்து கொண்டு வருகிறோம். பாக்கியம்மாள் எப்பொழுது இறந்தார் என்றால் 1959 ல் இறந்தார். பொன்னம்மாள் எப்பொழுது இறந்தார் என்றால் எனக்கு தெரியாது. வடிவம்பாள் எப்பொழு இறந்தார் என்றால் ஜீன் 1968 ல் இறந்தார்.

7. ராமலிங்கம் இறப்பிற்கு பிறகு அவர் மனைவியான 1ம் பிரதிவாதி எமரோஸ் அம்மாள் 2ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் பொன்னாம்மாளின் பெண் வாரிசுகளை விட்டுவிட்டு எழுதிய அந்த செட்டில்மெண்ட் ஆவணமானது செல்லாது. பட்டாவில் இருந்து எங்கள் பெயரில் நீக்கம் செய்யாமல் மேற்சொன்ன ஆவணமானது எழுதப்பட்ட காரணத்தினால் அது செல்லாது. கிஸ்து வரிகளை நாங்கள் தான் செலுத்தி வருகிறோம். ஆதியில் பட்டாவானது சாமிநாத முதலியார் மற்றும் ராமலிங்க முதலியார் என இருவர் பெயரில் வழங்கப்பட்டு இருந்தது என்றால் சரிதான். அதற்கு ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. அதன்பிறகு தனியாக எங்கள் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டது. அந்த பட்டாவின் அடிப்படையில் எந்தவொரு உரிமையும் கோர இயலாது என்றால் 1954 கிரைய கடிதம் மூலமாகவும் 1968 உயிலின் மூலமாகவும் நாங்கள் உரிமைகோருகிறோம். தெற்கு பக்கம் 20 செண்ட் நிலத்தை அனுபவித்தின் அடிப்படையில் உரிமைகோருகிறேனா அல்லது பத்திரத்தின் அடிப்படையில் உரிமைகோருகிறேனா என்றால் அனுபவித்தின் அடிப்படையில் உரிமைகோருகிறேன். அனுபவத்தின் அடிப்படையில் மட்டுமே வழக்கு சொத்திற்கு உரிமைகோர இயலாது என்றால் சரியல்ல.

8. ராமலிங்க முதலியார் 2001 ல் ஊர் தலைவராக இருந்தார். நிலவுடைமை பட்டா அதற்கு முன்பே வழங்கப்பட்டது என்றால் சரிதான். 1968 ல் உயிலில் யார் சாட்சி கையெழுத்து போட்டது என்றால் தெரியாது. எழுதியவர் பெயரும் தெரியாது. தாவா சொத்திற்கு வழக்கறிஞர் அறிவிப்பு 2013 ல் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். 2017 ல் உயிலின் நகலினை தேடிப்பார்த்து எடுத்தேன். ஆனால் 2019 ல் தான் பிராதினை திருத்தம் செய்ய மனு போட்டுள்ளேன் என்றால் சரிதான். 1968 ன் உயில் படிக்கும், 1954 ல் கிரைய கடிதம் வாயிலாக தெற்கு பக்கம் உள்ள 20 செண்ட் நிலத்தை கோர எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி எழுதிவைத்த செட்டில்மெண்ட் செல்லாது எனகூறவும்

எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு கொடுத்த பவர் செல்லாது எனக்கூற எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் இன்றுவரை பிரதிவாதிகள் தான் அனுபவித்தில் உள்ளார்கள் என்றும் வாதிகள் இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் இந்த வழக்கை தெற்கு புறம் உள்ள 20 செண்ட் நிலத்திற்கு உரிமை கோருவது செல்லாது என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம். 12.40 p.m.**